**ஆனமடுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆனமடுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

ரூபா 1,428,910 தொகையான இரண்டு இருப்பு பெறுமதிகள் ரூபா 30,036,549 தொகையான இரண்டு பொறுப்புக்கள், ரூபா 3,345,505 தொகையான பெற வேண்டிய பெறுமதிகள் மற்றும் ரூபா 190,400 தொகையான சொத்து உருப்படிகளாக பெறுமதி நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

ஆறு கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காணப்படும் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்பட்ட மீதிகளுக்கு இடையே ரூபா 15,676,008 ஆன வேறுபாடு காணப்பட்டன.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 30,786,832 கணக்கு மீதிகளில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் நிலுவையாக இருந்த ரூபா 2,998,039 கூட்டுத்தொகையான பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 77,751,643 செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 12,701,061 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 4,016,281 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| 158 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி மற்றும் ஏக்கர் வரி செலுத்தாமல் தவிர்ப்புச் செய்பவர்களுக்குரிய அசையும் சொத்துக்களை தடைசெய்து நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | |
| (i) 5(7) விதி | நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவு உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ii) 65 ஆம் விதி | சபைக்கு கிடக்க வேண்டிய வருமானங்களின் கொடுப்பனவை தவிர்ப்புச் செய்யும் நபர்களின் பெயர்பட்டியல் தயாரிக்கப்பட்டு செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 59,848,724 ஆக காணப்பட்டதுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,935,349 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சபையின் உழைத்த வருமானம் ரூபா 5,353,189 ஆலும் ஏனைய வருமானம் ரூபா 43,734,626 ஆலும் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் தொழிற்படு மூலதன விகிதம் 1.5:1 ஆக இருந்தது. முன்னைய ஆண்டின் போதும் இவ்விகிதம் சமமான பெறுமதியாக இருந்தது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 18.5 மில்லியனாக இருந்ததுடன் உள்ளவாறான வருமானம் 14.5 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3.5 மில்லியன் நிலுவை வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4.5 மில்லியனாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் பட்டியலிடல் ரூபா 16 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டில் சேகரிப்பு ரூபா 13 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல்

உள்ளவாறு பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 3 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.4.2 வீதவரி மற்றும் வரி**

முன்னைய ஆண்டுகளுக்குரிய மற்றும் மீளாய்வாண்டிற்குரிய முறையே 2,348,556 மற்றும் ரூபா 2,249,966 என நிலுவை வீதவரி அறவீட்டில் தாமதம் இடம்பெற்றிருந்தது.

**2.3.3 குத்தகை வாடகை**

முன்னைய ஆண்டுகளுக்குரிய மற்றும் மீளாய்வாண்டிற்குரிய முறையே 118,430 மற்றும் ரூபா 62,185 தொகையான நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.3.4 நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக கிடைக்க வேண்டி நீதிமன்ற தண்டப்பணம் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

சிலாபம், நிக்கவரட்டிய மற்றும் புத்தளம் ஆகிய மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகங்களிலிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல் மதிப்பீடு**

2016 ஆம் ஆண்டிற்காக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

07 செயற்திட்டங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 429,575 தொகையான தாமதக் கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 விளைவற்று/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ரூபா 597,668 கிரயமான டிராக்டர் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத சிறிய குபோட்டா உழவு இயந்திரம் வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்பட்டன.

**3.4 இனங்காணப்படாத நட்டங்கள்**

முறையான சாத்திய வள ஆய்வொன்று மேற்கொள்ளாமல் ரூபா 2,256,000 செலவு செய்து சபை வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக போதியளவு இடவசதிகள் இல்லையென தீர்மானிக்கப்பட்டு புதிய நிலையமொன்றினை சபை வளவிற்கு வெளியே நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**3.5 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

நாளாந்தம் சேகரிக்கப்படும் 02 தொன் மெற்றிக் தொன்னில் 01 தொன் அளவு சேதனப் பசளைக்கு உற்பத்தி பயன்படுத்தப்பட்டு வருவதுடன், எஞ்சிய கழிவுப் பொருட்கள் முறையாக வெளியேற்றப்படாததன் காரணமாக சுற்றாடல் சிக்கல்கள் உருவாகியிருந்தன.

**3.6 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் அபிவிருத்தி மற்றும் ஏனைய செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்களின் பிரகாரம் 7 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முறையற்ற விதத்தில் இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இரண்டு நிரந்த உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் மேலும் 10 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சபைக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(iii) 2013 ஆம் ஆண்டின் போது 14 ஆரம்ப தர உத்தியோகத்தர் பதவிகளுக்காக 58 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி அளவில் அத்தரத்தில் 14 பதவிகளுக்காக 66 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் 05 ஆரம்ப தர பதவிகளில் 09 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அப்பதவிகளில் 17 பேர் மிகையாக வம் காணப்பட்டனர்.

**4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்துதல்**

2010 ஒக்தோபர் 05 ஆந் திகதிய வ/பி/செ/05/03 ஆம் இலக்க வடமேல் மாகாண பிரதான செயலாளின் கணக்காய்வு குழு கடிதத்தின் பிரகாரம் ஆண்டின் போது 04 குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் ஒரு கூட்டமேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) பாதீடு | பாதீட்டில் மூலதனச் செலவினம் விபரமாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) வருமானம் நிர்வாகம் | நிலுவை வருமானம் தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | சில கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஆகியவற்றை உறுதிப்படுத்த முடியவில்லை. |
| (ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம் | சபைக்குச் சொந்தமான காணியை அளந்து வேறாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (உ) இருப்புக்கள் | முறையான உள்ளகக் கட்டுப்பாடொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் | நாளாந்தம் சேகரிக்கப்படும் அனைத்து கழிவு பொருட்களை சுற்றாடலுடன் இணைந்த வகையில் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை. |